2002 மே 9]

(ஆ) பெண்ணாகரம் தொகுதி குடிநீர்க் குழாய் உடைபட்டு இரண்டு பெண்கள் இறந்ததாகக் கூறப்படுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களுக்கு முன்பு என்னுடைய தொகுதியிலே குடிநீர்க் குழாய் உடைபட்டு, 2 பெண்கள் இறந்து இருக்கிறார்கள்; 16 பெண்கள் உட்பட...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது ஆய்வில் இருக்கிறது. நாளை எடுக்கமுடியுமா என்று பார்க்கிறேன். நாளைதான் இறுதிநாள். எடுக்க முடியாவிட்டால் துறையிலிருந்து ஏதாவது பதில் வந்தால் உங்களுக்குச் சொல்கிறேன்.*

முற்பகல் 11-25

(இ) பேரவை நிறைவேற்றிய தீர்மான நகலை எரித்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி டி. யசோதா.*

திருமதி டி. யசோதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். அந்தத் தீர்மானத்தினுடைய நகலை நேற்றையதினம் ஒரு கட்சிக்குச் சொந்தக்காரர் என்று சொல்லிக்கொள்கிறவர் அங்கே கொளுத்தியிருக்கிறார். காலையிலே கைது செய்து மாலையிலேயே அவரை விடுவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே இதுபோல அரசியல் சட்டத்தினுடைய நகலை எரித்த காரணத்தால் பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பதவியையே இழந்திருப்பது, இந்த சட்டமன்றத்தினுடைய வரலாறு. 10 சட்டமன்ற உறுப்பினர்கள், அதுபோல இருக்கிறபோது இந்த மன்றத்திலேயே நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தினுடைய நகலைக் கொளுத்தியவர்கள்மீது நம்முடைய சட்டமன்றம் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், எடுக்குமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. நெடுமாறன் அவர்களும் அவருடைய நண்பர்கள் சிலரும் நேற்று ஒரு போராட்டம் நடத்துவதாக அறிவித்திருந்தார்கள். இதற்கு காவல் துறை உரிய முன்னெச்சரிக்கை*